## 9th International Conference – Seminar on Tamil Studies

## ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

**29 Jan – 1 Feb 2015**
**University of Malaya,**
**Kuala Lumpur**

# Nurturing Tamil Studies in the Era of Globalization

# உலகமயக் காலக்கட்டத்தில் தமிழாய்வுக்கு வளம் சேர்த்தல்

(Articles / ஆய்வடங்கள்)

**Volumes : I, II, III, IV & V**

***“பல்லவர் கால பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் மெய்யியலின் செல்வாக்கு” - ஓர்; பகுப்பாய்வு -S.Nirosan, N.Sivakaran***

***“பல்லவர் கால பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் மெய்யியலின் செல்வாக்கு” - ஓர்; பகுப்பாய்வு***

***-S.Nirosan, N.Sivakaran***

# “பல்லவர்கால பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் மெய்யியலின் செல்வாக்கு” – ஓர் பகுப்பாய்வு

**S.Nirosan[1], N.Sivakaran[2]**

## Abstract

இவ் ஆய்வுக் கட்டுரையானது பல்லவர்கால பக்தி இயக்கத்தினர் தமிழையும், தமிழ் சமுதாயத்தையும், சமயக் கருத்துக்களையும் மற்றும் அனுட்டானங்களையும் மேன்மையுறச் செய்வதற்கு எவ்வாறு சமய மெய்யியற் சிந்தனைகளினை பின்புலமாக பயன்படுத்தியிருந்தார்கள் என்பதனை பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது. குறிப்பாக இறையிருப்பு, மறுபிறப்பு, ஊழ்வினைப் பயன், ஆன்ம விடுதலை, ஒழுக்க விழுமிய சிந்தனைகள் ஆகிய சமய மெய்யியற் சிந்தனைகள் பக்தி இயக்கத்தினரால் முதன்மைக்குரிய விடயங்களாக எடுத்தாளப்பட்டிருந்தன. மேற்குறித்த விடயங்கள் தொடர்பான தமது சிந்தனைகளை நிலைபெறச் செய்வதற்காக அவர்கள் பல்வேறுபட்ட மெய்யியல் முறையியல்களினை கையாண்டிருந்தனர். குறிப்பாக வாதங்கள் (argument), உரையாடல்கள் (dialectic), இயங்கியல் முறைகள் (dynamic), ஐயமுறை (doubt), தோற்றப்பாட்டியல் முறை (phenomenology) உய்த்தறி (deductive) தொகுத்தறி (inductive) போன்ற முறையியல்களினைப் பயன்படுத்தி தமது சிந்தனைகளினை, சமய உண்மைகளினை நிலைநிறுத்தியிருந்ததுடன் மட்டுமல்லாது பல்லவர் காலமானது தமிழர் மெய்யியல் வரலாற்றில் தத்துவ வளர்ச்சியில் ஒர் திருப்புமுனைக்குரிய காலமாகவும் ஆய்வாளர்களால் கருதப்படுவதற்கு காரணமாக அமைந்திருந்தது. பக்தி இயக்கத்தினர் தமது சிந்தனைகளினையும், சமய உண்மைகளினை நிலை நிறுத்துவதற்காக முன்னெடுத்த செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் மெய்யியல்சார் நுட்ப முறைகள் பிரதிபலித்திருந்தன. தமிழிசைப் பாடல்களை ஊடகமாகக் கொண்டு தாம் கூறவந்த கருத்துக்களை வெளிப்படுத்தியமை; வாதங்கள் பல புரிந்தமை; பதிகங்கள், பிரபந்தங்கள் போன்றவற்றின் மூலம் இறைவனுக்கு உருவம் கற்பித்தமை; உலகியல் வாழ்வினைப் போற்றி அதனூடே விடுதலைக்கு வழிகாட்டியமை; கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ள இயற்கை எழிலையும், அங்குள்ள கோயில்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் சிறப்பினையும் பாடியமை; அற்புதங்கள் பல செய்து இறைவன் மீது நம்பிக்கையும், பக்தியையும் ஏற்படுத்தியமை; சமூக சமரசம் பேணியமை; இயற்கையில் இறைவனைக் காண விளைந்தமை; இதிகாச புராணங்கள் கூறும் தத்துவார்த்த கருத்துக்களை தேவாரங்களிலும், பாசுரங்களிலும் வெளிப்படுத்தியமை; கலைகளை பக்தியோடு இணைத்து அவற்றை முதன்மைப்படுத்தியமை; பல்வேறு உறவுமுறைகளுக்கு ஊடாக ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையிலான நெருக்கமான தொடர்புகளை வெளிப்படுத்தியமை; பிறமத கண்டனங்கள் செய்தமை; சைவ, வைணவ மதங்களிடையே ஒற்றுமையை பேணியமை போன்ற அவர்களது செயற்பாடுகள் அனைத்திலும் மேற்குறித்த தர்க்க ரீதியான மெய்யியல் முறைமைகள் உள்ளுறையாய் அமைந்திருந்தன. எனவே இன்றைய காலகட்டம் வரை தமிழும், தமிழ் சமுதாயமும் நின்று நிலைக்க அடித்தளமிட்ட பக்தி இயக்கத்தினரின் சமய மெய்யியற் சிந்தனைகளையும், அவை எடுத்தாளப்பட்ட நுட்பங்களையும் குறித்த சிந்தனைகளை விரிவுபடுத்துவதாக இவ் ஆய்வு அமைகின்றது. இவ் ஆய்வின் மூலம் காலம் சூழலுக்கு ஏற்ப தாம் சொல்லவந்த சமய மெய்யியற் சிந்தனைகளை நுட்பமுற எடுத்தியம்பிய பக்தி இயக்கத்தினரின் சிறப்பியல்புகளை எடுத்தியம்ப முடிவதுடன், தமிழ் சமுதாயத்தினைக் கட்டிக் காப்பாற்றியதில் அவர்களது பங்களிப்பினையும் கண்டுணர முடிகின்றது. இவ் ஆய்வுக் கட்டுரையானது பகுப்பாய்வு முறையியல், விபரண முறையியல், வரலாற்று முறையியல் என்பவற்றின் துணை கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு இவ் ஆய்விற்கான தரவுகள் பல்லவர்கள் கால தமிழ் மூலநூல்களையும், தமிழ் இலக்கிய வரலாற்றுச் சம்பவங்களை எடுத்தியம்பும் நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றில் இருந்தும் பெறப்பட்டுள்ளன.

பிரதான சொற்கள்:- பக்தி இயக்கம், வைதீக சமயங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், நுட்பமுறைகள்.

**ஆய்வின் அறிமுகம்.**

சங்ககாலத்து இயற்கைநெறி வாழ்வின் காதலாலும், வீரத்தினாலும் சலிப்புற்றிருந்த மக்கள் அறவாழ்வினை பெரிதும் விரும்பினர். இதனால் சங்ககால வாழ்க்கை முறையினை நோய் எனக்கருதி அதற்கு மருந்தாக அறக்கருத்துக்களை வலியுறுத்திய சமண, பௌத்த மதங்களின் சிந்தனைகள் மக்களை வெகுவாக ஈர்த்தன. அது மாத்திரமன்றி சங்கமருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சியின் விளைவாக சமண, பௌத்த மதங்கள் அரச ஆதரவுடன் வலுவாக வளர்ச்சியடைந்து வந்தன. இதன் விளைவாக தொன்மைச் சமயங்களான சைவசமயமும், வைணவ சமயமும் அழிவடையும் அபாயத்தினை எதிர்நோக்கின. எனவே இந்நிலையில் இருந்து சைவ, வைணவ மதங்களை பாதுகாக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. இதனால் பக்தியை ஆயுதமாகக் கொண்டு பக்தி இயக்கம் தோற்றம் பெற்றது. பல்லவர் காலத்தில் பெருக்கெடுத்துச் சென்ற பத்தி மார்க்கம் சங்கமருவியகால பிற்பகுதியில் ஊற்றெடுக்கத் தொடங்கியது எனலாம். இக்காலப்பகுதியில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் முதலிய சைவப் பெரியார்களும், முதலாழ்வார்களாகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் போன்ற வைணவ ஆழ்வார்களும் இறைவனது திருவுருவைக் கண்டு அனுபவித்தல், அவன் புகழ்பாடுதல் என்பவற்றை தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு தம் காலத்தைக் கழித்தனர். அம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பனவும், முதலாழ்வார்கள் அருளிச் செய்த திருவந்தாதிகளும் பல்லவர்கால பக்திநெறிக்கு விடிவெள்ளியாக அமைந்தன எனலாம்.

> ''இடர்களையா ரேனும் எமக்குஇரங்கா ரேனும்
> படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
> என்பு அறாக் கோலத்து எரியாடும் எம்மனார்க்கு
> அன்பு அறாது என்நெஞ்சு அவர்க்கு''

என்று காரைக்கால் அம்மையாரும்

> ''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
> இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
> ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
> ஞானத் தமிழ்புரிந்த நான்''

என்று பூதத்தாழ்வாரும் தொடக்கி வைத்த அன்புநெறி பல்லவர் காலத்தில் நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பக்தி இயக்கமாக உருப்பெற்றது. இப்பக்தி இயக்கத்தில் 64 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் முன்னிலையில் இருந்தனர். இவர்களுடன் திருத்தொண்டர் தொகையின் அடிப்படையில் தொகை அடியார்கள் 9 வகையினரும் அடங்குவர். காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமான் போன்றோர் பக்தியைத் தாம் அனுபவித்தனர். தாம் அனுபவித்தவற்றைப் பாடல் வழியில் வெளிப்படுத்தினர். ஆனால் ஏனைய நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி இயக்கம் சார்ந்த கருத்துக்களையும், அனுட்டானங்களையும் வளர்த்துக் கொள்வதற்காகவும், அவற்றை நிலை நிறுத்துவதற்காகவும் பல்வேறு நுட்பங்களைக் கையாண்டனர்.

**ஆய்வுப் பிரச்சினை**

பக்தி இயக்கத்தினர் சங்கமருவிய காலத்தில் மக்கள் மத்தியில் வலுவாக வேரூன்றியிருந்த சமண, பௌத்த மதங்களின் சிந்தனைகளை நிராகரித்து சைவ, வைணவ சிந்தனைளை மக்கள் மத்தியில் பரவச் செய்தனர். அவ்வாறு தமது

கருத்துக்களையும், அனுட்டானங்களையும் நிலைநிறுத்துவதற்காக பக்தி இயக்கத்தினர் பல்வேறு மெய்யியல்சார் நுட்பங்களை கையாண்டிருந்தனர். இதன் மூலம் அவர்களது கருத்துக்கள் இன்றுவரை சைவமும், தமிழும் நின்றுநிலைக்க வழிவகுத்தன. எனவே பக்தி இயக்கத்தினர் எத்தகைய மெய்யியல்சார் உத்திமுறைகளைக் கையாண்டிருந்தனர் என்பதும், அதன் வழி எவ்வாறு தமது கருத்துக்களை நிலைநிறுத்திக் கொண்டனர் என்பதுமே இங்கு ஆய்வுக்குரிய பிரச்சினைகளாகின்றன.

**ஆய்வின் கருதுகோள்.**

''பல்லவர்கால பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் மெய்யியலின் செல்வாக்கு – ஓர் பகுப்பாய்வு'' என்ற இவ் ஆய்வானது ''பல்லவர்கால பக்தி இயக்கத்தினர் தமது சிந்தனைகளை நிலைபெறச் செய்வதற்காக அவர்கள் பல்வேறுபட்ட மெய்யியல் முறையியல்களினை கையாண்டிருந்தனர்'' என்ற கருதுகோளை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையும் தரவு சேகரித்தலும்**

பகுப்பாய்வு முறையியல், விபரண முறையியல், வரலாற்று முறையியல் ஆகிய முறையியல்கள் இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பக்தி இயக்கத்தினரின் கருத்துக்களையும், அனுட்டானங்களையும், சமய மெய்யியற் சிந்தனைகளையும் தெளிவுபடுத்தும் வகையில் விபரண முறையியலும்; பக்தி இயக்கத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை தமிழ் இலக்கிய வரலாற்றினூடாக கண்டுகொள்ளும் வகையில் வரலாற்று முறையியலும்; தரவுகளைப் பகுப்பாய்வு செய்து முடிவுகளையும், பரிந்துரைகளையும் கண்டுகொள்ளும் வகையில் பகுப்பாய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு இவ் ஆய்வுக்குரிய தரவுகள் தமிழ் இலக்கிய மூலநூல்கள், ஏனைய தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

**பகுப்பாய்வு**

பக்தி இயக்கத்தினர் தமது சிந்தனைகளினையும், சமய உண்மைகளினை நிலை நிறுத்துவதற்காக முன்னெடுத்த செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் மெய்யியல்சார் நுட்ப முறைகள் பிரதிபலித்திருந்தன. தமிழிசைப் பாடல்களை ஊடகமாகக் கொண்டு தாம் கூறவந்த கருத்துக்களை வெளிப்படுத்தியமை; வாதங்கள் பல புரிந்தமை; பதிகங்கள், பிரபந்தங்கள் போன்றவற்றின் மூலம் இறைவனுக்கு உருவம் கற்பித்தமை; உலகியல் வாழ்வினைப் போற்றி அதனூடே விடுதலைக்கு வழிகாட்டியமை; கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ள இயற்கை எழிலையும், அங்குள்ள கோயில்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் சிறப்பினையும் பாடியமை; அற்புதங்கள் பல செய்து இறைவன் மீது நம்பிக்கையும், பக்தியையும் ஏற்படுத்தியமை; சமூக சமரசம் பேணியமை; இயற்கையில் இறைவனைக் காண விளைந்தமை; இதிகாச புராணங்கள் கூறும் தத்துவார்த்த கருத்துக்களை தேவாரங்களிலும், பாசுரங்களிலும் வெளிப்படுத்தியமை; கலைகளை பக்தியோடு இணைத்து அவற்றை முதன்மைப்படுத்தியமை; பல்வேறு உறவுமுறைகளுக்கு ஊடாக ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையிலான நெருக்கமான தொடர்புகளை வெளிப்படுத்தியமை; பிறமத கண்டனங்கள் செய்தமை; சைவ, வைணவ மதங்களிடையே ஒற்றுமையை பேணியமை போன்ற அவர்களது செயற்பாடுகள் அனைத்திலும் மேற்குறித்த தர்க்க ரீதியான மெய்யியல் முறைமைகள் உள்ளுறையாய் அமைந்திருந்தன.

எந்தவொரு மதத்தின் வளர்ச்சிக்கும், அதன் உயர்ச்சிக்கும் அரச ஆதரவு மிகமிக இன்றியமையாததாக விளங்குகின்றது. வடதமிழகத்திலும், தென் தமிழகத்திலும் மகேந்திர பல்லவனினதும், பாண்டிய நெருமாறனினதும் ஆதரவோடு கொடிகட்டிப் பறந்த

சமண, பௌத்த மதங்களைப் பின்தள்ளி சைவ, வைணவ மதங்களை மேன்மையுறச் செய்வதற்கு மன்னர்களை மதம்மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தேவையை நிறைவு செய்வதற்காக அப்பர் மகேந்திர பல்லவனையும், சம்மந்தர் பாண்டிய நெடுமாறனையும் அற்புதங்கள் பல செய்து மதம் மாறச் செய்தமை குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வாக அமைகின்றது. ''மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி'' என்பதற்கு இணங்க மன்னர்களது மதமாற்றம் மக்களையும் மதம் மாறவைக்க சைவ, வைணவ மதங்கள் பெருவளர்ச்சி கண்டன.

மக்கள் மத்தியில் சமயக் கருத்துக்களை பரப்புவதன் அவசியத்தையும், அவர்களின் பங்களிப்பின் அவசியத்தையும் உணர்ந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் மக்கள் இசையுடன் பாடக்கூடிய தேவாரங்களையும், பாசுரங்களையும் இயற்றினர். அவற்றை மக்கள் இசையுடன் பாடச்செய்து ஊர் ஊராகச் சென்று சமய தழைத்தோங்க உழைத்தனர். மக்கள் மத்தியில் சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்கேற்ற சிறந்த ஊடகமாக இசையுடன் பாடக்கூடிய தேவாரங்களையும், பாசுரங்களையும் பக்தி இயக்கத்தினரான நாயன்மார்களும், ஆழ்வார்களும் பயன்படுத்தியிருக்கின்றனர். ஊனையும், உயிரையும் உருக்கி உள்ளொளி பரப்பும் தேவாரங்களும் பாசுரங்களும் மக்களை அணிதிரட்டச் செய்வதற்குச் சிறப்பான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் மக்கள் மத்தியில் வழக்கிலிருந்த பா வடிவங்களையும் அவர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். சங்ககாலம் தொட்டு சிறப்புற்று விளங்கிய பண்ணும், பக்க வாத்தியங்களும் பக்தி இயக்கத்தினராலும் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இதனால் பக்தியை மூலதனமாகவும், பண்ணமைந்த பாடல்களை ஊடகமாகவும் கொண்டு நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தை முன்னெடுத்தனர்.

உதாரணமாக நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் நன்னோக்கத்துடன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய பெருமக்கள் மூவரும் அருளிய திருப்பதிகங்கள் இறைவனை முன்னிலை, படர்க்கை என்னும் இரண்டு இடங்களிலும் போற்றிப் பரவுவன. ஆதலால் தேவாரம் என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றன. மேலும் திருஞான சம்பந்தர் 1600 பதிகங்களும், திருநாவுக்கரசர் 4900 பதிகங்களும், சுந்தரர் 3800 பதிகங்களும் பாடி அருளினர் எனக் குறிப்பிடப்படுகின்றது. இதிலிருந்து இவர்கள் இசைப்பாடல்களை தமது கருத்துக்களை வளர்த்தெடுத்துக் கொள்வதற்காக பயன்படுத்தினர் என்பது தெளிவுபடுகின்றது. ஆழ்வார்களும் இவ் இசைப்பாடல்களைக் கையாண்டுள்ளனர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி, திருச்சந்த விருத்தம் போன்றனவும் பண்ணோடு பாடுவதற்குரிய தமிழிலக்கியங்களாகும். அதுமாத்திரமன்றி நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பதிகங்களுக்கு பழந்தமிழ்ப் பண்களும் தாளங்களும் குறிக்கப் பெற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கதாகும். எனவே பண்ணோடு கலந்த இசைப் பாடல்களை ஊடகமாகப் பயன்படுத்தி பக்தி இயக்கத்தினர் தாம் சார்ந்துள்ள கருத்துக்களையும், அனுட்டானங்களையும் வளர்த்துக் கொண்டுள்ளனர்.

பக்தி இயக்கத்தினர் தமது தேவாரங்கள், பாசுரங்கள் வழியாக உருவமற்ற இறைவனுக்கு உருவம் கற்பித்து சைவ, வைணவ மதங்கள் மேலும் செழிப்புற வழிவகுத்தனர். அதாவது குணங்குறிகளைக் கடந்து நிற்கும் பரம்பொருளுக்கு உருவம் கற்பித்து வழிபடுவது இந்து சமயத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். அந்த வகையில் பல்லவர்கால நாயன்மார்களும், ஆழ்வார்களும் தாம் கண்டுணர்ந்த இறைவனின் உருவங்களை சாதாரண நிலைப்பட்டவர்களும் உணரும் வண்ணம் தேவார, பாசுரங்களில் வர்ணித்தனர்.

''வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே''

என்ற பாடலில் திருஞானசம்மந்தரும், ''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்பும்……'' என்ற பாடலில் அப்பரும் ஆடல்வல்லானின் திருவுருவத்தை பாடுகின்றனர். நாயன்மார்கள் தம் முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கு திருவுருவம் கற்பித்தது போன்று, ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் திருமாலுக்குத் திருவுருவம் கற்பித்தனர். ''பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே…..'' என்று தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலின் உருவத்தை வர்ணிக்கின்றார். இதனால் உருவ வழிபாடு முதன்மை பெற்றது. இறைவன் மீது அடியார்கள் கொண்ட பக்தியும் வலுப்பெற்றது.

பழந்தமிழரின் வாழ்வைக் கண்டனம் செய்து கடும்துறவை வலியுறுத்திய சமண, பௌத்த மதக் கொள்கைகளுக்கு மாறாக ஒரு நெகிழ்ச்சித் தன்மையான போக்கினைக் கையாள்வதன் மூலம் பக்தி இயக்கத்தினை வளர்த்துக் கொண்டனர். சமணத்திலும், பௌத்தத்திலும் நிலையாமைக் கருத்துக்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன. சமண, பௌத்த சமயிகள் அறிவு எனும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தமது போதனைகளால் மக்கள் மனதில் இடம்பெற்றனர். ஆனால் அவர்கள் தீவிர நோன்புகள், தீவிர துறவறம் என்பவற்றையும், பெண்களை இழித்தல், சமயத்தின் பெயரால் தற்கொலை செய்தல் போன்ற பழக்கவழக்கங்களையும் கொண்டிருந்தனர். இவை மக்கள் மத்தியில் ஓர் அதிருப்தியினைத் தோற்றுவித்தன. ஆணைத் துறவியாகவும், பெண்ணை பக்தாவுக்கேற்ற பதிவிரதையாகவும் ஆக்க முற்பட்ட சமண, பௌத்த மதங்கள் வாழ்வு துன்பமானது, வாழ்வியல் நிலையற்றது என்று வெறுப்பதான கோட்பாடுகளை தமது நடுவண் கொள்கைகளாகக் கொண்டிருந்தனர். ''வாழ்க்கை எத்துணை அழகானது; வாழ்வின் நிலை இவ்வாறிருக்கையில், வாழ்வியலில் காணப்படும் சிறுபகுதியான துன்பத்தை மட்டுமே வாழ்வின் முழுமையாக ஏன் புத்தர் கண்டுகொள்ளத் துணிந்தாரோ'' என இராதாகிருஷ்ணன் ஆதங்கப்படுகின்றார்.

மாறாக பக்தி இயக்கத்தினர் அன்பினால் முத்தியடையலாம் என்று போதிக்கலாயினர். வைதீக சமயங்கள் மனித உளவியலைப் புரிந்த வகையில் உருவாக்கப்பட்டவை. மனிதன் தனக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளில் இருந்து தப்பியோடாது அவற்றை உள்வாங்கி உதவக்கூடிய இயல்புகளின் வழியாக உரிய பரிகாரம் கண்டு சீர்செய்து சமநிலைப்பட்டு நீண்ட வாழ்க்கையோட்டத்தை கடந்து செல்வதே வாழ்வியல் மரபு; வாழ்வியல் ஒழுங்குமுறை என்பதனை வைதீக சமயங்கள் சிறப்பாக கற்பித்துள்ளன. உலகியல் வாழ்வை, இல்வாழ்வை விடுதலைக்கு பெரும்தடையாக கூறி திருமணம் செய்தல் பாவம் என வலியுறுத்திய சமண, பௌத்த மதக் கொள்கைகளுக்கு மாறாக வைதீக சமயங்களாகிய சைவமும், வைணவமும் இல்வாழ்விற்குப் பின்னரே துறவறத்தை வைத்து நோக்கியது. இதனை பக்தி இயக்கமும் எடுத்தியம்பியது. அதனாலேயே ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; பெண்ணினல்லாளொடு பெருந்தகை இருந்ததே'' என சம்மந்தரும், ''அம்மை நீ அப்பன் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ'' என அப்பரும் இறைவனையே குடும்பஸ்தனாகக் காட்டியுள்ளார்கள். மேலும் சைவத்தின் முழுமுதற்பொருள் சிவனும், பார்வதியும்; வைணவத்தின் முழுமுதற்பொருள் திருமாலும் இலக்குமி பூமாதேவியும் எப்போதும் கல்யாணக் கோலத்துடன் காட்சி தருவர். அவர்கள் இல்வாழ்வின் சிறப்பிற்காக தனம், கல்வி அனைத்தும் தருவர்.

''மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்

எண்ணினல் லகதிற்கு யாதுமோர் குறைவிலை
கண்ணினல் ல.ஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகையிருந்ததே''

என சம்மந்தரும்

''குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

என்று திருமங்கையாழ்வாரும் பாடியிருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும். இவ்வாறாக பக்தி இயக்கம் உலகியல் வாழ்க்கையைப் போற்றி அதனூடாக பேரின்பத்தைக் காணவிளைகின்றது. வைதீக நெறிகள் இறுதி இலக்காகக் கொண்டிருக்கும் பேரின்பத்தைக் காண்பதற்கு அடிப்படையாக அமைவது அன்பு ஆகும். மக்கள் அறிதற்கரியவனான அந்த இறைவனை முழுமுதற் பொருளை உய்த்துணர்ந்து வீடுபேறு எய்த வழிசமைப்பதே அன்புநெறி ஆகும். இதனைத் திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'' என்கின்றார். எனவே சமண, பௌத்த சிந்தனைகளை விட பக்தி நெறியை மையமாகக் கொண்ட சைவ, வைணவ சிந்தனைகள் வாழ்வியலிலும், மறுமையிலும் வளம்பெற போதியவையாகக் காணப்பட்டதனை பக்தி இயக்கம் பயன்படுத்திக் கொண்டது.

கிராமம் கிராமமாகச் சென்று தமது பக்தி அனுபவங்களை இனிய பாசுரங்களால் புலப்படுத்தினர். அடியார்களையும், கலைஞர்களையும் இணைத்துக் கொண்டு தமது நாட்டில் கிராமம் தோறும் சென்று செய்த பக்திப்பாடல்களை, குறிப்பிட்ட ஓர் இடத்திலோ அல்லது குறிப்பிட்ட ஒரு சூழலிலோ இருந்து பாடாமல் பல்வேறு இடங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் இருந்து பாடியுள்ளதாக தெரிகின்றது. தம் பிரதேசத்தைப் பற்றி பிறர் புகழ தாம்கேட்டு மகிழாத மனிதர் இல்லை எனலாம். இப்பிரதேச உணர்வை ஊட்டுவதன் மூலம் தமிழ் மக்களை தம்பக்கம் கவர்ந்து கொண்டது பக்தி இயக்கம். உதாரணமாக சம்மந்தர், அப்பர், சுந்தர் ஆகியோர் தமிழ்நாடு முழுவதும் சென்று அங்கு இறைவன் கோயில் கொண்டுள்ளதாக கற்பித்து, இயற்கை சூழலோடு பொருந்தி இறைவனைப் பாடியுள்ளார்கள். இது குறித்து விளக்குகின்ற ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் ''சம்மந்தர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தவர்; பிரதேச உணர்ச்சியைப் பயன்படுத்தி சைவசமய மறுமலர்ச்சியில் மக்களை முன்னின்று உழைக்கச் செய்ய சம்மந்தர் இந்த முறையைக் கையாண்டிருக்கின்றார் போலத் தெரிகின்றது'' என்கின்றார். ''வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்று அஞ்சி சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே'' எனச் சம்மந்தரும், ''கரும்பருகே கருங்குவளை கண் வளரும் களனி கமலங்கள் முகமலரும் கலைய நல்லூர் காணே'' எனச் சுந்தரரும், ''தெங்குதிரள் சோலை தென்னம் பெருந்துறையான்'' என மாணிக்கவாசகரும், ''தேனார்

பூஞ்சோலை திருவேங்கடச் சுனை'' என ஆழ்வார்களும் பிரதேச உணர்வினை ஊட்டினர். அதன் மூலம் நற்சிந்தனைகளை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி மத அனுட்டானங்களை பின்பற்றச் செய்தனர். குளங்களையும், தூய்மை இழந்த கோயில்களையும் புதுப்பிக்கச் செய்தனர்.

அற்புதங்கள் பல செய்து இறைவன் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியதோடு, பக்தியையும் விதைத்தனர். மதத்தினது திடீர் வளர்ச்சிக்கு அற்புதங்கள் நிகழ்த்துவது தவிர்க்க முடியாததே. அதாவது ஒரு சமய அனுட்டானம் நின்று நிலைபெற இயற்கை இகந்த சில செயற்பாடுகளை நிகழ்த்த வேண்டிய தேவை உண்டு. அத்தகைய நிகழ்வுகள் சமயத்தின் மீதான பிடிப்பை வலுவூட்டும். சமண, பௌத்த மதங்கள் ஆங்காங்கு சிறுபான்மையாக அற்புதங்கள் நிகழ்த்தினாலும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பற்பல சந்தர்ப்பங்களில் பல்வேறு இடங்களில் பல வகையான அற்புதங்களை நிகழ்த்தினர்.

உதாரணமாக ''மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு...'' என்ற தேவாரத்தைப்பாடி சம்மந்தர் கூன்பாண்டியனது வெப்புநோயை நீக்கினார். நாவுக்கரசருக்கு சமணர்கள் பல துன்பங்கள் இழைத்தும் அவர் இறைவன் அருளால் சாகாதிருக்க இறுதியில் கல்லோடு கடலில் இட்ட பொழுது ''சொற்றுணை வேதியன் சோதி வானவன்....'' எனப்பாடினார்; கல் தெப்பமாக மிதந்தது. இவ்வாறு தீமை எதனாலும் துன்புறாதிருந்த நாவுக்கரசரைக் கண்டு, மகேந்திர பல்லவ மன்னன் சைவசமயமே மெய்ச்சமயம் என உணர்ந்து கொண்டான். மேலும் ஆண் பனையை, பெண் பனையாக்கியும், நரிகளைப் பரிகளாக்கியும், எலும்பைப் பெண்ணாக்கியும், பாம்பு தீண்டி இறந்த சிறுவனை உயிர்ப்பித்தும் பல அற்புதங்களை நிகழ்த்தி பக்தி இயக்கத்தைப் பரவச் செய்து தாம் சார்ந்த கருத்துக்களையும், அனுட்டானங்களையும் வலுப்படுத்தினர்.

பக்தி இயக்கம் சமூக சமரசம் பேணியதன் மூலம் பாரபட்சமின்றி அனைத்து மக்களையும் தம் பக்கம் ஈர்த்துக் கொண்டது. பக்தி இயக்கமானது சமுதாயத்தில் சாதி, குலம், பிறப்பு, பால் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து சென்றிருக்கின்றது. மனித குலம் ஒன்றே என்ற சீரிய பண்பினை சிறப்புறக் கையாண்டு தம் சமுதாயத்தில் காணப்பட்ட சாதி ஏற்றத்தாழ்வினைப் புறங்கண்டனர். பிராமண குலத்திலே தோன்றிய சம்மந்தர், வேளாளர் குலத்திலே தோன்றிய அப்பரை வணங்குவதும்; சம்மந்தருக்குப் பாணர் குலப் பெண் யாழ் வாசித்தமையும்; வேடர்குல கண்ணப்பரை மாணிக்கவாசகர் போற்றுவதும்; வணிகர் குலத்திலே தோன்றிய காரைக்கால் அம்மையார், கீழ்க்குல நந்தனார் வரலாறுகளும் இதனை உணர்த்துகின்றன. ''சாத்திரம் பலபேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என்ன செய்வீர்'' என சாதிவேறுபாட்டினையும், கல்விச் செருக்கையும் கண்டித்து ''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுக்குள்ளே இறைவன் புக்கு நிற்பான்'' என அப்பர் புகழ்வதும் கவனிக்கத்தக்கது. மேலும் தீண்டாக் குடும்பத்தைச் சேர்ந்த தீருநீலகண்டர் என்பவரை திருஞானசம்பந்தர் தம்முடன் தலங்களுக்கு அழைத்துச் சென்றார். பிராமணர்களின் தெருக்களுக்கும், வீடுகளுக்கும் அழைத்துச் சென்றார். தீண்டத்தகாதவர் உள்ளே வருவதனால் பிராமணர் வளர்க்கும் வேள்வித் தீ அவிந்து குற்றம் ஏற்படுமோ என பலரும் அஞ்சிய போது அஞ்சாமல் வேள்வித் தீயின் அருகே அழைத்துச் சென்று தீ முன்னைவிட சுடர்விட்டு ஒளிர்வதை மற்றவர்கள் காணச் செய்தார். மேலும் பல்வேறு சமூகக் காரணங்களால் பிளவுற்றிருந்த தமிழ் சமுதாயத்தை பக்தி எனும் ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைக்கும் முயற்சியை பக்தி இயக்கம் மேற்கொண்டது.

''ஆவுரித்துத் தின்றுஉளலும் புலையரேனும் கங்கைவார்
சடைக்கடந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம்
வணங்கும் கடவுளாரே''

என்று நாயன்மார்களும்,

''குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர் களாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுஉள்
கலந்தார் அடியார் தம் அடியாரெம் அடியார்களே!'' என்று ஆழ்வார்களும் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. கைலாசபதி அவர்கள் இதனை ''நாயன்மார்களும் ஆழ்வார்களும் சாதிமுறையை எதிர்ப்பவராயினர். இறைவன் முன் யாவரும் சமம் என்ற குரல் எழுப்பினர். வேடர் முதல் பறையர் வரை பக்தர்களாயின் ஒன்றே என்ற கருத்து உருவாகியது'' எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் சமண, பௌத்த நெறிகள் பெண்களை இழிவானவர்கள், தாழ்வானவர்கள், பலவீனமானவர்கள் என பழித்துரைத்துப் பின்தள்ளியது. ஆனால் வைதீக நெறிகள் பால் வேறுபாட்டைப் புறக்கணித்து பெண்களை மேன்மைப்படுத்தி, முன்னிலைப்படுத்தி தலைமைப் பதவியையும் வழங்கிய தன்மை வரவேற்பைப் பெற்றது. காரைக்கால் அம்மையார் தொடக்கி வைத்த பணியை திலகவதியாரும், மங்கையற்கரசியாரும் தொடர்ந்து செய்தனர். அதுமாத்திரமன்றி ''சாதி வேறுபாடுகளையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்து நின்ற திருஞான சம்பந்தர் பெண்கள் பெற்றிருந்த தாழ்வினைப் போக்குவதற்கும் முயன்றார்'' என மு.வரதராசன் குறிப்பிடுகின்றார்.

பக்தியைப் பரப்புகின்ற பொழுது இயற்கை வனப்பையும், வளத்தையும் கவனத்திலெடுக்கத் தவறவில்லை. பிரதேசத்தின் இயற்கை வனப்பையும், வரலாற்றுச் சிறப்பினையும் வளங்களையும் புகழ்ந்துபாடி மக்கள் - மொழி - பிரதேசம் - சமயம் என்கின்ற ஒருமைப்பாட்டு சிந்தனையினை உருவாக்கினர். சோலை, மலை, காடு, வயல், ஆறு போன்ற பிரதேசங்கள் இறைவனுக்கு உவப்பானவை என்றும், இத்தகைய பிரதேசங்களில் இறையுறையும் கோயில்களை அமைத்து, மக்களும் அங்கு குடியேறி இயல்பாகக் காணப்பட்ட நீர்வளத்தையும், நிலவளத்தையும் பயன்படுத்தி வாழ்வியலிலும் செழிப்புற்றிருக்க பக்தி இயக்கத்தினர் வழி செய்தனர். ''மாவின் கனிதூங்கும் பொழில் மாதோட்டம்'' ''குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே'' என தம் அகக்கண்ணால் திருக்கேதீஸ்வரத்தையும், கோணேஸ்வரத்தையும் கண்டு பக்தி இயக்கத்தையும், சைவத்தையும் இலங்கை வரை எடுத்துச் சென்று சைவமும் தமிழும் கடல் கடந்து செழிப்புற்று விளங்க விரும்பி உழைத்தனர். இயற்கையில் இறைவனைக் கண்டு கொள்ளும் போக்கினைக் கையாண்டனர். இதனை மாணிக்கவாசகரது

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான்எனதுஎன்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே'' என்ற பாடல் உணர்த்துகின்றது.

வடமொழியில் அமைந்த வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் கூறும் செய்திகளை நாயன்மார்களும், ஆழ்வார்களும் தூய செந்தமிழில் சாதாரண மக்களுக்கும் விளங்கக்கூடிய இசைப்பாடல்களாக பக்தி அனுபவத்தை ஊட்டக்கூடியதாகப் பாடினர். உதாரணமாக ''செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை'' என்று கூறும் சேந்தனால் பாடலடிகள் முப்புரம் எரித்த புராணக்கதையை வெளிப்படுத்துகின்றது. அதேபோன்று

''மன்னுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மாமதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே

என்னுடைய இன்னமுதே இராகவனெ தாலேலோ''

எனும் குலசேகர ஆழ்வாரது பாடலில் இராமாயணக் கதைகள் வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு புராண இதிகாசங்களில் கூறப்பட்ட செய்திகளை இசைப்பாடல்களில் எடுத்தியம்பியமையானது வைதீக மதங்களின் வளர்ச்சிக்கு வலுச்சேர்த்துள்ளன. இதை உணர்ந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது தேவாரங்களிலும், பாசுரங்களிலும் இதிகாச புராணங்களில் கூறப்பட்ட செய்திகளை வெளிப்படுத்தினர். இதனால் இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு சூனியமாக இருந்த சமயக் கருத்துக்கள் உரிமை உடையன என்று கூறத்தக்க அளவிற்கு மக்கள் மத்தியில் பரவின.

பக்தி இயக்கம் பக்தியை கலைகளோடு இணைந்து அவற்றை முதன்மைப்படுத்தினர். சமணம், பௌத்தம் போன்ற சமயங்கள் கடுமையான ஒழுக்க நெறியினை வற்புறுத்துவதன் மூலம் கலைகளைப் புறக்கணித்த வேளையில் சைவ, வைணவ மதங்கள் அவ்வாறு புறக்கணிக்காததோடு மட்டுமன்றி அவற்றையெல்லாம் பக்தியோடு இணைத்து மக்களின் இயல்பான ரசனைக்கு விருந்து வைத்தனர். இவற்றுக்கு மேலாக 'நாடகம் சாராமை' என்ற சமண, பௌத்த மதக் கோட்பாட்டுக்கு மறுதலையாக இறைவனையே 'கூத்துகந்தான்' என்றும், 'ஆடல்வல்லான்' என்றும் திருமறைகள் சிறப்பிக்கின்றன. மேலும் பக்தி இயக்கத்தில் கலைகளின் நோக்கம் கடவுளைக் காணல் எனும் கருத்து மிகுந்திருந்ததனை காணலாம். இசை மனதை இசைவிக்கும் தன்மையது. சிவனை சாமகாணப் பிரியனாக சைவம் சுட்டுகின்றது. இதனால் பக்திப் பாசுரங்களும் இசைத்தன்மையுடையதாக அமைகின்றது. சம்பந்தர் இசையின் மகிமையினை 'இசை பாடிட' 'இசைகற்று வல்லார்' 'இசை குலவுமாறு வல்லார்' 'இசை பக்திமையாற் பாடுதல்' என்றெல்லாம் தனது பதிகங்களில் புகழ்ந்துள்ளார். சுந்தரர் 'ஏழிசையின் தமிழால் இசைந்தேத்திய பக்திமை' என்றும்; 'தமிழோடு இசைகேட்கும் இச்சை' என்றும் குறிப்பிடுகின்றார். அப்பர் 'தமிழோடு இசைபாட மறந்தறியேன்' என குறிப்பிடுகின்றார். இவை பக்தி இயக்கம் கலைகளுக்கு அளித்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. இதனைவிட கட்டிடம், சிற்பம், ஓவியம், நடனம் போன்ற பல்வேறு நுன்கலைகளும் பல்லவர்கால பக்தி இயக்கத்தின் பண்பும் பயனுமாக அமைந்தன. பல்லவர்கால கோவில்கள் இவற்றின் உறைவிடம் மட்டுமல்ல பிறப்பிடமும், வளர்ப்பிடமுமாக இருந்தன என்று உறுதியாகக் கூறலாம். 1ம் இராஜசிம்மனால் காஞ்சியில் அமைக்கப்பட்ட கைலாசநாதர் கோவில் பல்லவர்கால கட்டிட, சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

எங்கோ இருக்கின்ற எட்டித்தொட முடியாத, அதேவேளை உள்ளுணர்வால் உணரக்கூடிய இறைவனை எங்களுள் ஒருவனாக அவனை பல்வேறு உறவுநிலைகளில் கண்டு தமது பக்தி உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்தினர். சம்பந்தர் சற்புத்திர மார்க்கத்தின் வழியாக இறைவனை தாய் தந்தையராகக் கண்டு ''பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான்'' எனப்பாடி மகிழ்கின்றார். சைவத்திலிருந்து மாறி சமணத்துறவியாக விளங்கி சைவத்திற்கு மீண்ட அப்பர் தாசமார்க்கத்தின் வழியாக இறைவனுடைய அடியவனாகத் தம்மைக் கண்டு ''ஏற்றாய் அடிக்கேன் இரவும் பகலும் பிரியாது வணங்குவன்'' என கழிவிரக்கத்தைக் காட்டுகின்றார். சுந்தரர் சகமார்க்கத்தின் வழியாக இறைவனைத் தோழனாகக் கண்டதனால் தோழமை உரிமையோடு 'பித்தா' என அழைக்கின்றார். மாணிக்கவாசகர் குருந்தமர நிழலில் தனக்கு அறிவூட்டி ஆட்கொண்ட இறைவனை சன்மார்க்கத்தின் வழியாக காதலனாகக் கண்டு ''அத்தன் ஆனந்தன அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்'' என்கின்றார். பெரியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் கண்ணனை குழந்தையாகக் கண்டு ''மாணிக்குறளனே தாழேலோ வையம் அளந்தானே தாழேலோ'' எனச் சித்தரிக்கின்றனர். ஆண்டாள் இறைவனைக்

காதலனாகக் கண்டு ‘‘மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னை கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்’’ என்றவாறாக சித்தரிக்கின்றார்.

மேலும் பிறமத கண்டனங்கள் மூலமும் பக்தி இயக்கத்தை வளர்த்தனர். அக்கால சூழ்நிலையில் பிறமத கண்டனம் அவசியம் தேவையாயிற்று. சமண, பௌத்த சமயங்கள் இந்து சமயத்திற்கு எதிராக மேற்கொண்ட அடக்குமுறைகள் அத்தகைய எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டிற்று எனலாம். சம்பந்தர் தமது பாடல்களில் சமண, பௌத்தர்களை கண்டனம் செய்வதனையும், இழிவுபடுத்த முயல்வதையும் காணலாம். ‘‘பெண்ணகத்து எழில்சாக்கியப் பேய்அமன் தென்னாற் கற்பழிக்கத் திருவுள்ளமே’’ என்ற சம்பந்தரது பாடலடி இங்கு நோக்கத்தக்கது. எனவே பிறமத கண்டனங்கள் மூலம் பக்தி இயக்கம் தமது கருத்துக்களையும் அனுட்டானங்களையும் வளர்த்துக் கொண்டன எனலாம்.

மேலும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தம் வாழ்வினூடே பக்தியின் உச்சத்தை வெளிப்படுத்தினர். இதற்கு திருநாவுக்கரசரது வாழ்க்கை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நீற்றறையில் அடைத்தபோதும், யானையை ஏவிய போதும், கல்லோடு கட்டிக் கடலில் போட்ட போதும் மனம் தளராது பதிகங்கள் பாடி அத்துன்பங்கள் அனைத்தையும் கடந்தார். மேலும் கண்ணப்பரின் கண்தானம், சிறுத்தொண்டரின் பிள்ளைக்கறி, திருநீலகண்டர் இளமைக்கால வேட்கைகளைத் துறந்தமை போன்ற செயற்பாடுகள் பக்தி வைராக்கியத்தை பறைசாற்றுவதாக அமைந்தன. அவர்கள் பக்தியின் சிகரங்களாக விளங்கினர். சரியெனக் கண்டதில் தீவிர ஈர்ப்பும் வைராக்கியமும் கொண்ட இவர்களது வாழ்க்கை பக்திநெறிக்கு மட்டுமன்றி இல்லற வாழ்விற்கும் நற்செய்தியாக அமைந்தன.

இந்துமதத்தின் இருபெரும் கிளைகளான சைவமும், வைணவமும் தமது பொது எதிரிகளான சமண, பௌத்தர்களுக்கு எதிராக நடத்திய இயக்க பூர்வமான போராட்டத்தின் விளைவே பல்லவர்கால பக்தி இயக்கங்கள் எனலாம். இப்பக்தி இயக்கத்தின் ஆரம்பத்தில் அகச்சமயங்களிடையே ஒற்றுமை காணப்பட்டது. சிவனையும், விஷ்ணுவையும் சங்கர நாராயணனாக் காணும் பண்பு நிலவியது. சிவனையும் திருமாலையும் ஒரே உருவமாக வைத்து வழிபடும் ஹரிஹர மூர்த்தி வழிபாடு தோன்றுகின்றது. இதனை பேயாழ்வாரது பின்வரும் பாடல் உறுதி செய்கின்றது.

‘‘தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து’’

என சிவனையும் திருமாலையும் ஒன்றாகவே காண்கின்றனர். இது குறித்து பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது ‘‘இரு சமயங்களும் ஒன்றுபட்டு நின்றிராவிடின் பரவிக்கொண்டிருந்து சமண சமயத்தை எதிர்க்கும் ஆற்றல் வைதீக சமயங்களுக்கு வாய்த்திருக்க மாட்டாது’’ எனக் குறிப்பிடுகின்றார்.

இவை யாவற்றுக்கும் மேலாக பக்தி இயக்கம் தம்முடைய கருத்துக்களை வலுவாக நிலைநாட்டுவதற்கு தமிழ் மொழியைப் பயன்படுத்தினர். நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழ் மொழிக்கும் இறைவனுக்கும் இடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்தி பக்தி இயக்கத்தை வளர்த்தனர். தேசிய இலக்கியம் எனும் நூலில் அதன் ஆசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் திருஞானசம்பந்தர் குறித்து குறிப்பிடுகின்ற பொழுது ‘‘தமிழ் முரசு கொட்டி, தமிழ்கொடி ஏந்தி, தமிழ்க் கவிதையால் தமிழ் கடவுளைப் பாடி தூங்கும் தமிழினத்தை தட்டியெழுப்பிய

வீரத்தமிழர் ஒருவர் உளர் என்றால் அவர் திருஞானசம்பந்தர் அல்லாமல் வேறுயார்'' என்கின்றார். 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்'' என சம்பந்தரும், 'தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' என அப்பரும், 'துறைவாய் நுழை நுழைந்தனையோ ஒன்தீம் தமிழின்' என மாணிக்கவாசகரும், 'பழந்தமிழின் பின் சென்று பச்சைத் தமிழ்ப் பசுங் கொண்டலே' என ஆழ்வார்களும் மொழிப்பற்றை ஆயுதமாகக் கொண்டனர். தாய்மொழியால், அதன் பற்றுணர்வால் ஈர்க்கப்படாதவர் எக்காலத்தும், எவ்விடத்தும் இல்லை எனலாம். அந்த வகையில் தமிழ் மொழிப்பற்றை ஆயுதமாகக் கொண்டு பக்தி இயக்கம் தாம் சார்ந்துள்ள கருத்துக்களையும், அனுட்டானங்களையும் வளர்த்துக் கொண்ட பொழுதும் தமிழ் மக்கள் அனைவரும் அதன்பால் கவரப்பட்டனர்.

**முடிவுரை**

மேற்குறித்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் பொழுது பக்தி இயக்கத்தினர் தமது கருத்துக்களை, அனுட்டானங்களையும் பரப்புகையில் கையாண்டுள்ள மெய்யியல்சார் நுட்பங்கள் புலனாகின்றது. குறிப்பாக வாதங்கள் (argument), உரையாடல்கள் (dialectic), இயங்கியல் முறைகள் (dynamic), ஐயமுறை (doubt), தோற்றப்பாட்டியல் முறை (phenomenology) உய்த்தறி (deductive) தொகுத்தறி (inductive) போன்ற முறையியல்களினைப் பயன்படுத்தி தமது சிந்தனைகளினை, சமய உண்மைகளினை நிலைநிறுத்தியிருந்தனர். பக்தி இயக்கத்தினர் சமண, பௌத்தர்களுக்கு எதிராக வாதங்கள் புரிந்து அவர்களது மதங்களில் காணப்பட்ட குறைபாடுகளை கண்டனம் செய்தனர். மக்களோடு உரையாடி தமது கருத்துக்களை உரை, எதிர் உரை, இணையுரை என்ற அடிப்படையில் இயங்கியல் முறையினூடாகவும் தமது கருத்துக்களை வலுப்படுத்தினர். இயற்கை வர்ணனைகள், சமூக வாழ்வு என்பவற்றின் மூலம் தமது கருத்துக்களை வலுப்படுத்த முற்படுகின்ற பொழுது தோற்றப்பாட்டியல் சார் அணுகுமுறைகளைக் கையாண்டனர். மேலும் அவர்கள் தாம் கொண்டிருந்த உறுதியான முடிவுகளை உய்த்தறி, தொகுத்தறி முறைகளைப் பயன்படுத்தி பெற்றுக் கொண்டனர் எனலாம். இத்தகைய மெய்யியல்சார் உத்திமுறைகளை அவர்கள் பயன்படுத்தியிருப்பதனாலேயே பல்லவர் காலமானது தமிழர் மெய்யியல் வரலாற்றில் தத்துவ வளர்ச்சியில் ஓர் திருப்புமுனைக்குரிய காலமாக ஆய்வாளர்களால் கருதப்படுவதற்கும் காரணமாக அமைந்திருந்தது.

## References


அருணாசலம்.மு, *தமிழ் இலக்கிய வரலாறு,* தஞ்சை; காந்தி வித்தியாலயம் (1976)

………………., *தமிழ் இலக்கியம் சொல்லும் கதைகள்,* சென்னை; சாகித்திய அக்காதெமி (1984)

கலைக்கோவன்.இரா, *அப்பரும் அவிநயமும்,* சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (1999)

சாந்தி கேசவன், *இந்து நாகரிகம்,* மட்டக்களப்பு; ராஜாஸ் புத்தக நிலையம், (1994)

சீனிவாசன்.ரா, *தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள்,* சென்னை; பாரி நிலையம் (1964)

……………., *தமிழ் இலக்கிய வரலாறு,* சென்னை; அணியகம் (1964)

சுப்பிரமணியன்.ச.வே, *தமிழ் இலக்கிய வரலாறு,* சென்னை; மணிவாசகர் பதிப்பகம் (2003)

செந்துறையான், *தமிழ் இலக்கிய வரலாறு,* சென்னை; தமிழன் நிலையம் (1998)

செல்வநாயகம்.வி, தமிழ் இலக்கிய வரலாறு, கொழும்பு; குமரன் புத்தக இல்லம் (2005)

கலைவாணி இராமநாதன் ''சம்மந்தர் தேவாரம் காட்டும் பண்பாட்டுக் கோலங்கள்'' *இந்துநெறி,* யாழ் பல்கலைக்கழகம்; இந்துமன்றம் (2008)

சஞ்சிகா.இ ''கலையின் வெளிப்பாடே பக்திநெறி'' *இந்துநெறி,* யாழ் பல்கலைக்கழகம்; இந்துமன்றம் (2008)